**செய்தி வெளியீடு எண்: 343** **நாள்: 24.05.2018**

## செய்தி வெளியீடு

பள்ளிக் கல்வித் துறை அரசாணை எண்.99, நாள் 22.5.2017–ன்படி 1 முதல் 12–ஆம் வகுப்பு வரையிலான பாடத் திட்டங்களை SCERT வாயிலாக மாற்றியமைக்க தமிழக அரசு உத்தரவிட்டது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 12 பேர் அடங்கிய உயர்மட்டக் குழு அரசின் சார்பில் அமைக்கப்பட்டது.

மேலும், தற்போதுள்ள கல்வி முறையை மேம்படுத்த **பேராசிரியர் எம். அனந்தகிருஷ்ணன்** தலைமையில் 9 கல்வியாளர்கள், அறிஞர்கள் அடங்கிய கலைத்திட்ட வடிவமைப்புக் குழு அமைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பல்வேறு நிலைகளில் உயர்மட்டக் குழு, கலைத் திட்டக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. உரிய வல்லுநர்கள், கல்வியாளர்களைக் கொண்டு மாநிலம் முழுவதும் மண்டல வாரியாக SCERT வாயிலாக கருத்து கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட்டது.

2018–19 ஆம் கல்வியாண்டிற்கென முதல் கட்டமாக 1,6,9 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடநூல்கள் எழுத பாடவாரியாக பேராசிரியர்கள், வல்லுநர்கள், கல்வியாளர்கள் அடங்கிய பாடம் எழுதும் குழு அமைக்கப்பட்டது. இதன்படி எழுதப்பட்ட பாடநூல்கள் மேலாய்வாளர்கள் மூலம் மேலாய்வு செய்யப்பட்டு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய புத்தகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதற்காக அமைக்கப்பட்ட வடிவமைப்புக் குழு மூலம் தரம் உறுதி செய்யப்பட்டு புதிய பாடநூல்கள் தரமான முறையில் அச்சிடப்பட்டுள்ளன.

மேற்கூறிய 4 வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்ட பாடநூல்கள் கீழ்வரும் சிறப்பு அம்சங்களுடன் SCERT மூலம் தயார் செய்யப்பட்டுள்ளது.

புதிய பாடத்திட்டத்தின்படி உருவாக்கப்பட்டுள்ள பாடநூல்கள் சிறந்த வல்லுநர்களால் மாணவர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளத் தக்க வகையில் பாடத்திட்டங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதால் பக்கங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

Quick Response (Q.R. Code) Code போன்ற சிறப்பு அம்சங்களுடன் பாடநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பாடநூல்கள் வழக்கமாக அச்சிட பயன்படுத்தப்படும் TNPL 80 GSM Hi-Tech மேப் லித்தோ தாளுக்குப் பதிலாக தரம் உயர்ந்த TNPL 80 GSM Elegent தாள் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக 11–ஆம் வகுப்பு பாடநூல்கள் TNPL 60 GSM Creamwove தாளில் ஒரு வண்ண அச்சுக்குப் பதிலாக, TNPL 80 GSM Elegent Printing தாளில் 4 வண்ணங்களில் வண்ணமயமாக அச்சிடப்பட்டுள்ளன.

பாடநூல்களுக்கான மேலட்டை TNPL 230 GSM Aura Pearl-லுக்குப் பதிலாக TNPL 230 GSM Aura Fold Blu என்னும் தரம் உயர்த்தப்பட்ட மேலட்டையைப் பயன்படுத்தி பாடநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் மேம்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தின்படி பாடநூல்களின் மேலட்டைகள் சிறந்த முறையில் அச்சிடப்பட்டு லேமினேஷன் செய்த புதுப்பொலிவுடன் தயாரிக்கப்பட்டுள்ளன.

புதிய பாடத்திட்டத்தின்படி தயார் செய்யப்பட்டுள்ள 1,6,9 மற்றும் 11–ஆம் வகுப்புகளுக்குரிய விலையில்லாப் பாடநூல்கள், பள்ளி திறக்கும் அன்றே மாணாக்கர்களுக்கு வழங்க ஏதுவாக அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1,6 மற்றும் 9 வகுப்புகளுக்கான விற்பனைப் பாடநூல்கள் விற்பனை 24.5.2018 அன்று முதல் தொடங்கப்பட உள்ளது. 11.ஆம் வகுப்புகளுக்கான விற்பனைப் பாடநூல்கள் ஜுன் இரண்டாவது வாரத்தில் பள்ளிகள் துவங்கும் முன்பு விற்பனை தொடங்கப்பட உள்ளது.

இப்புதிய நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் பாடநூல்கள் தயாரிக்கப்பட்டு அச்சடிக்கப்பட்டுள்ளதால் அதற்கேற்றவாறு விற்பனை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**